செ.வெ.எண் : 51/ஜுலை                                                    நாள் : 28.07.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற 10.08.2017 அன்று நடைபெறவுள்ளது.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமாநாதபுரம் மாவட்டத்தில் மாவட்ட அளவிலான ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில், சென்னை அரசு கூடுதல் செயலாளர், நிதித்துறை, ஓய்வூதிய இயக்குநர் அவர்களின் முன்னிலையில் 10.08.2017 அன்று வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலுள்ள வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. ஓய்வூதியதாரர்கள் தங்களது ஓய்வூதியம் தொடர்பான குறைகளை **மாவட்ட ஆட்சித்தலைவர், இராமநாதபுரம்** என்ற முகவரிக்கு **ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் மனு** எனக் குறிப்பிட்டு இரட்டை பிரதிகளில் 01.08.2017-க்குள் தங்களது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க கேட்டுக்கெள்ளப்படுகிறார்கள். விண்ணப்பம் செய்த ஓய்வூதியதாரர்கள் மேற்படி குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளும்படி தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**